உ

கணபதி துணை.

# புட்பவிதி.

---

திருவாரூர்

ஞானப்பிரகாசபட்டாரகர்

அருளிச்செய்தது.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. 1873

---

ஸ்ரீமுக௵ மாசி௴.

---

நான்காம் பதிப்பு.

41

உ

கணபதி துணை.

# புட்பவிதி.

## விநாயகர்காப்பு.

பாமாலை சூடும் பரமற்கு நாயடியேன்
பூமாலை பாடிப் புனைகின்றேன் - மாமாது
வேதத் தலைவரருள் வேழத்தின் பாதமலர்
போதத் தலைமேற் புனைந்து.

## சிவஸ்துதி.

பொன்பூத்தநறவிதழி புரிசடைமேற்புனைந்து
புனலறுகு வெள்ளெருக்கம் பூச்சூடிநளின
மின்பூத்த கருங்குவளை பசுங்குமிழ் செங்காந்தள்
வெண்முல்லையரக்காம்பலிடப்பாகம்பூத்து
முன்பூத்தபுண்டரிகம் வெண்டாளமிரண்டு
முகமலரவிமையவர்க ளகமலரமுகுந்தன்
றன்பூத்த திருவுந்தியயன்பரவக் கனக
சபையினடமிடுகடவுள்சரணமலர்சரணம். (க)

## கோட்டுப்பூ வகை.

வன்னி பலாவெனுமிச்சை நாரத்தைகோங்கு
மந்தாரை யூமத்தை மாவிலிங்கை நொச்சி
பன்னியகில்சந்துமகிழ் மாதுளைமாவசோகு
பாதிரிவெள் ளெருக்கிலந்தை பலாசுநுணாநறவம்
புன்னைவிளாமருதுகொன்றை நெல்லிகுராச்செருந்தி
பொன்னிறவிரைகிளுவை குருந்துவில்வநாவன்
மன்னுதாதகிகுளஞ்சி யலரிவெட்சிபவள
மல்லிகைசண்பகஞாழல் கோட்டுப்பூவகையே. (உ)

## கொடிப்பூவகை. வேறு.

மருவாருங்காந்தள்காட்டுமெல்லிகைமுல்லைமௌவல்
கருவார்வெற்றிலையேதாளிகருமுகைகருங்காக்கொன்றை
முருகாரும்வெண்காக்கொன்றைகுருக்கத்திமுதலாவுள்ள
விருவாட்சிகொகுடிபிச்சியிவையெலாங்கொடிப்பூவாமே.(௩)

## நீர்ப்பூவகை. வேறு.

செய்யதாமரைசேர்ந்தபொற்றாமரை
தூய்யதாமரைசொல்லிரண்டுற்பல
மையசெம்மையவெண்மையவாகிய
நெய்தன்மற்றிவைநீரின்மலர்களே. (௪)

## நிலப்பூவகை. வேறு.

பட்டிநாயுருவிபூளை பச்சைசெவ்வந்திதும்பை
வெட்டிவேர்மருக்கொழுந்து கரந்தையேவிஷ்ணுகாந்தி
மட்டவிழ்துழாய்செங்கீரை மத்தைசெம்பரத்தைவங்க
மிட்டகொக்கிறகணிச்சம் வலம்புரியிவைநிலப்பூ. (௫)

## துளபமெடுக்கலாகாத நாள்.

இரவொடுகோலைமாலை யிரவியேவெள்ளிசெவ்வாய்
பரவுமட்டமியீராறு பதினான்குபர்வமோணம்
விரவியமாதத்தாதி விதிபாதமபராணத்தின்
மருவியதுளபங்கொய்யின் மால்சிரங்கொய்தலொக்கும். (௬)

## வில்வமெடுக்கலாகாத நாள். வேறு.

தவமுறு மாதமுன் சதுர்த்தி யட்டமி
நவமியே சதுர்த்தசி நவின்ற நல்லுவா
வவமறு சோமவா ரத்து மன்பர்கள்
சிவனருச் சனைசெயும் வில்வங் கிண்டிடார். (௭)

## துளவமும் வில்வமு மித்தனைமாதத்துக்காகு மெனல். வேறு.

கூறுநாளி லெடுத்திடு கூவிள
மாறுமாதம்வைத் தர்ச்சனைசெய்யலா

நாறும் வெள்ளி நிறத்த நறுந்துழா
யேறுமர்ச்சனையீராறு திங்களே. (அ)

## துளபத்துக்கும் வில்வத்துக்கும் புறனடை.

ஈரிலை கீழுற விருந்து பூத்திடுஞ்
சீரிய துழாய்மலர் தினமுங் கொய்யலா
மூரிடும் புழுக்கடி யொன்று மேயலாற்
பாரினி லவையெலாம் பழுதில் வில்வமே. (கூ)

## இன்ன இன்ன பத்திர புஷ்பங்களிலே நிர்மாலியமு மாகுமெனல்.

செழித்திடுந் துளபமுஞ் சிறந்த வில்வமும்
வழுத்துபொன் மத்தமு மலரு நீலமு
மழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழித்தநிர் மாலியங் கழுவிச் சாத்தலாம். (க0)

## இத்தனை நாளிம்மலராகுமெனல்.

அம்புய மேழுநா ளலரி மூன்றுநாள்
வம்பவிழ் குடலையில் வைத்துச் சாத்தலா
நம்பிடு நறுமலர் நண்ணி டாவிடிற்
றம்பழுப் பரும்பிலை தளிருஞ் சாத்தலாம். (கக)

## உத்தம மத்திம அதமமலர்கள்.

உத்தமந் தனக்கென வுற்ற நந்தனம்
மத்திமங் காட்டினின் மலர்ந்த பூவெலா
மித்தலந் தொருவன்வைத் திட்ட சூழலி
லத்தனை மலர்களு மதம மாகுமே. (கஉ)

## இம்மலர்களிழிபெனல். வேறு.

எடுத்துவைத்தேயலர்ந்தமலர்பழம்பூக்கண்மற்ற
வெருக்கிலையாமணக்கிலையினிற்பொதிந்தபூக்க
ளுடுத்தபுடைவையிற்கரத்தினமைத்தநறும்பூக்க
ளுதிர்ந்திடுபூவரையின்கீழுற்றவிரைப்பூக்க

ளடுத்தபுழுக்கடியெச்சஞ்சிலந்திமயிருறுத
லங்கையில்வைத்தங்கைகுவித்திடுதல்கங்குறனிலே
யெடுத்தமலர்நீரமிழ்த்தல்புறங்காட்டிலெய்த
லெச்சில்குளியாதெடுத்தலிழிபெனுமாகமமே. (கங)

வாரபுட்பம். வேறு.

பங்கயமலர்ந்தவெள்ளாம்பல்பாசடைச்
செங்கழுநீர்மலர்தகரச்செம்மலர்
தங்கியகுவலயந்தைவெண்டாமரை
மங்கைகேணீலமேழ்வாரபுட்பமே. (கச)

வாரபத்திரம்.

சூரியன்வில்வமேதுளசிதிங்களே
யாரலில்விளாவிலையறிவன்மாதுளை
வேரிநாயுருவிபொன்வெள்ளிநாவலே
காரியாஞ்சனியினில்விஷ்ணுகாந்தியே. (கரு)

பஞ்சவில்வம்.

மெச்சியேயடியவர்வியந்துசாத்திடு
நொச்சியேநறுவிளாநுவன்றகூவிளம்
வைச்சிடுங்கிளுவையேமாவிலிங்கையின்
பச்சிலையென்றிவைபஞ்சவில்வமே. (கசு)

காலையிற்சாத்தும் அஷ்டபுட்பம்.

வம்பவிழலரிநாயுருவிமல்லிகை
வெம்பியவெருக்குடன்வில்வம்வெண்மலர்
நம்பியவடுக்கலர்நந்திநாண்மல
ரம்புயங்காலையிலஷ்டபுட்பமே. (கஎ)

உச்சியிற்சாத்தும் அஷ்டபுட்பம். வேறு.

போதவிழ்பொன்னூமத்தைபுலிநகக்கொன்றைவெள்ளைப்
பாதிரிவன்னிசெய்யவழுதுணைபடர்மந்தாரை
பேதமாய்மலரும்வெள்ளைக்கரக்கொன்றைபெரியதும்பை
யோதியவிவைகளெட்டுமுச்சியிலஷ்டபுட்பம். (கஅ)

## அந்தி அர்த்தயாமம் அபராணங்களிற்சாத்தும் அஷ்டபுட்பம்.

வந்தமல்லிகையிரண்டுமெகிழ்தருமல்லிகைப்பூக்
கொந்துவேர்சண்பகப்பூச்சிறியசண்பகங்கொழுந்து
சிந்தைகூரஷ்டபுட்பஞ்சிவன்முடிக்கேறும்போழ்தி
லந்தியோடர்த்தயாமமபராணந்தனினுமாமே. (௧௯)

## புலரிமுதலியகால மெல்லாவற்றிற்குமுரிய அஷ்டபுட்பம். வேறு.

இலகியபுன்னைவெள்ளெருக்குச்சண்பக
நிலவியவலம்புரிநீலம்பாதிரி
யலரிசெந்தாமரையஷ்டபுட்பமாம்
புலரியம்போதொடெப்பொழுதுஞ்சாத்தலாம். (௨0)

## மாதபுட்பம். வேறு.

மெத்தியபலாசுபுன்னைவெள்ளெருக்கலரிப்போது
கொத்தலர்சண்பகப்பூக்கொன்றையேதும்பைசெய்ய
கத்தரிபட்டிகஞ்சங்காவிமல்லிகையீராறுஞ்
சித்திரைமுதலாக்கொள்கசிறந்திடுமாதபுட்பம். (௨௧)

## மாசவபிஷேகம். வேறு.

கொழுந்துசந்தனங்கூறியமுப்பழ
மழுந்துபால்சர்க்கரைபணியாரமே
தழைந்தவன்னந்தழநெய்யொழுகுதேன்
விழைந்தநெய்பொதிகம்பளம்வெண்டயிர். (௨௨)

## கேதாரநாதர்க்குரிய பத்திரபுட்பம். வேறு.

வில்லமருச்சுதமத்தமாதுளையேநொச்சி
மேவியமுள்ளிலந்தைநறுங்கரந்தைசெழுவன்னி
சொல்லியகத்தரிநெல்லிசண்பகமேசாதி
தும்பையொடுமருதுமாமந்தாரமலரி

யெல்லவரும்புகழுமந்தவிஷ்ணுகாந்தி
யெழிற்றேவதாருவுடனெருக்கறுகென்றுரைக்கு
நல்லனவாம்பத்திரங்களிருபத்தொன்று
நாடரியகேதாரநாதனுக்கர்ச்சனையே. (௨௩)

## விநாயகசதுர்த்திக்குரிய பத்திரபுட்பம்.

மேதகுமாசிப்பச்சைநறுங்கையாந்தகரை
வில்வமுடனூமத்தைநொச்சிநாயுருவி
யேதமில்கத்தரிவன்னியலரிகாட்டாத்தி
யெருக்குமருதுடன்மால் பேரியம்புகாந்தி
மாதுளையேயுயர்தேவதாருமருநெல்லி
மன்னுசிறுசண்பகமேகெந்தளிபாதிரியே
யோதரியவறுகிவையோரிருபத்தொன்று
முயர்விநாயகசதுர்த்திக்குரைத்திடுபத்திரமே. (௨௪)

## புஷ்பஞ்சாத்துமுறைமை. வேறு.

மூறையுறுமஷ்டபுட்பமுதலியசாத்தும்போதி
லிறைவனுக்கொருபூவேனுமெண்ணினிற்குறையலாகா
கிறைவுறப்புனைதல்வேண்டுநீள்மலர்கிடையாதாகிற்
குறைவறச்சொன்னபுட்பங்கூட்டியுங்கொள்ளலாமே. (௨௫)

## இதுவுமது. வேறு.

நறைமலர்ப்பொருட்டுநன்னுளம்போக்கியே
குறையுறக்குற்றமாங்குறைபடாவகை
நிறைவுறச்சாத்துகநீரின்போதெலாம்
புறவிதழ்போக்கினும்புனிதமென்பவே. (௨௬)

## இன்னமலரின்னதேவர்க்காமெனல். வேறு.

வில்வமுடன்கொன்றைமலர்சங்கரற்குநேயம்
வேழமுகற்கறுகுவெட்சிகடம்புவிசாகனுக்காங்
குல்லைநெய்தலவர்காமலைமகட்குநீலங்
கோகனதஞ்சூரியற்குத்திருமகட்குநெய்தல்

வில்லகலேமடத்தைக்குவெண்கமலநேயம்
வருங்கொடியகடவுளர்க்குச்செம்மலர்கணேய
மல்லிமலர்க்கருங்குவளையனைவருக்குநேய
மம்மலரேயெம்மலர்க்குமதிகமெனவுரைப்பார். (உஎ)

இன்னமலரின்னதேவர்க்காகாதெனல். வேறு.

தும்பைமறையோர்தமக்காகா துர்க்கைக்கறுகம்புல்லாகா
வெம்புகதிர்வானவன்றனக்கு வில்வமாகாவிநாயகற்கு
வம்பார்துளபந்தானுகா வடுகன்றனக்குவலம்புரியு
மம்பைதனக்குநெல்லியுமிங் காகாவென்பரறிந்தோரே.(உஅ)

விஷ்ணுவுக்காகுமலர்கள். வேறு.

மாதவிகுருந்துவாகை மதயாணிகருங்காக்கொன்றை
சீதளமுருக்குச்செம்பட் டலரியேசெம்பரத்தை
கேதகைகருந்துழாய்செந் திலகமுங்கேசவற்கா
நாதனுக்காகாவிந்த நறுமலரலகைக்காமே. (உகூ)

திரிகால நிர்ணயம். வேறு.

காலையானது தாமதகாலமே
யேலுமுச்சி யிராசதகாலமே
மாலைநேரமும் வாழ்த்தியாமமுஞ்
சாலும்வைகறைக் காலமுஞ்சாத்திகம். (௩௦)

தமோகாலமலர்.

போதுளோதிய பொன்னிறப்பூவுடன்
சாதிநீலந்தவிர்ந்தகரியபூ
மாதுகேளிவை தாமதமாமல
ரோதுகாலையிற் சாத்துதலுத்தமம். (௩க)

இராசதகாலமலர். வேறு.

செய்யதாமரைபலாசு செங்கழுநீர்பொன்மத்தை
செய்யமந்தாரைசெய்ய வழுதுணைசெய்யபட்டி

செய்யபாதிரியேசெய்ய புலிநகக்கொன்றையுச்சிக்
கெய்திராசதப்பூவாகு மெழுந்தபட்டலரிப்பூவும். (௩௨)

சாத்திககாலமலர்.

வெள்ளைமந்தாரைபிச்சி வலம்புரிவெண்காக்கொன்றை
வெள்ளையம்புயமெருக்கு மல்லிகைவெள்ளிலோத்தி
வெள்ளலரியின்பூத்தாளி மிளிர்புன்னைமகிழ்செவ்வந்தி
தள்ளருந்தும்பைசாதி சாத்திகமலர்களாமே. (௩௩)

எல்லாமலருமாமெனல். வேறு.

கூறும்பூவிங்கிதுவென்று குறிப்பாருளரோகுவலயத்தி
னூறும்பூவுந்தேவருக்கா நாறுப்பூவுந்தேவருக்காந்
தேறும்பூவையாகமத்திற் கரைகண்டவரார்சிவன்முடிமே
லேறும்பூவாய்வனத்திலுள்ளவெல்லாப்பூவும்பயன்படுமால்.

சிவபூசைசெய்தவைகள்.

குதிரைசிலந்திகழுகுடும்பு குரங்குநரியீயெறும்புசிதன்
மதுவண்டல்வன்கரியரியா மஞ்ஞையெகினம்புறவாந்தை
ததியெண்காமை முயல்கோம்பி தத்தைகேழ லருச்சிப்ப
விதியும்விலக்குங்கடந்தாற்குவிதியாலொன்றைவிதிப்பாரார்.()

வேடவடிவாய்ப் புலைச்சியிடும்வில்வம்புனைந்து சண்டாள
வேடஞ்சுமந்துசோமாசி வேள்வியகத்துவிடக்கேந்தி
வேடன்சுட்டசுடுகாட்டு வெந்தசாம்பன்மிசைந்தார்க்கும்
வேடனெச்சினுகர்ந்தார்க்கும் விதியாலொன்றைவிதிப்பாரார்.

குன்றுமரம்புல்லிவைமுதலாக்கோம்பியுடும்புதாமுதலா
வன்றில்கழு காந்தைகண்முதலாவரவுசிறுதேளிவைமுதலாப்
பன்றிகரடியெலிமுதலாப்பரமற்குரிமைப்பயன்படலா
லின்றுமுதலாநாயடியே னெல்லாப்பிறப்பும்வேண்டுவனால்.()

இன்னமலரின்னபாவத்தைநீக்குமெனல்.

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னைநீக்கு
மிதழிதா யரைக்கொன்ற வேதநீக்கும்

வெள்ளெருக்குப் பரதார வினைதணிக்கும்
 வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்குங்
கள்ளுணவு கோங்கம்பூப் புனையநீக்குங்
 கத்தரியினிலைபுனையக்குட்டநீக்கு
முள்ளியதெல்லாமெய்தும்வறுமைநீக்கு
 மொண்டுழாய்மலர்களினு முயர்ச்சிதானே. (௩௮)

தும்பைமலர் கோகத்திதோஷநீக்குஞ்
 சொன்னநயந்திடுகளவு பலாசுநீக்குந்
தம்பிதமையனைக்கோற லறுகுநீக்குஞ்
 சாத்திடுஞ்சந்தனமகா துக்கநீக்கு
மம்புவியிலிலிங்கபின்ன மசோகுநீக்கு
 மடைந்தோர்தம் வறுமையெல்லா மான்பானிக்கும்
வம்பவிழ்நெய்நெல்லியிவை யுரோகநீக்கும்
 வளர்நீலோற்பலநீக்கும் வாக்குத்தோஷம். (௩௯)

இன்னமலரின்னபோகத்தைத்தருமெனல்.

பாதிரியம் பிகைக்கணியி னில்லாளெய்தும்
 பலாசமலரருச்சிக்கப் பணிகளுண்டாங்
கேதகையின் மலர்சாத்தச் சிவிகையெய்துங்
 கிளர்முல்லை மலர்சாத்தக் கவிகையுண்டாந்
தாதுமாதுளைசாத்தத் தனங்களெய்துந்
 தாமரையின்மலர்சாத்தப் பகைகணீங்கு
மேதகுநாரத்தையிலை வியந்துசாத்தில்
 விரைத்தகரை சாத்தியிழற் பசுவுண்டாமே. (௪௦)

தேக்கமழு மெலுமிச்சைக் காடுபெல்குஞ்
 செங்கழுநீர்மலர்சாத்தப் புரவியெய்துங்
காக்கமழுமலர்சாத்தக் கமலைசேர்வாள்
 கல்லாரமலர்சாத்தப் புதல்வர்ப்பேறு
மாக்கமழுநெய்தலுக்கர்த் தங்களுண்டா
 மதுவபிடேகம்பண்ணிற் சிதமுண்டாம்

பாக்கியங்களத்தனையும்வேண்டுமென்னிற்
பரிமளமாமலரனைத்தும்பார்வதிக்கர்ச்சனையே. (சக)

அரிசியோடறுகுசாத்த லருக்கியம்பூவினாலே
பரிவுறக்கொடுத்தல்யாக புண்ணியம்பலவுமுண்டாம்
விரிமலர்நீலமத்த யாமத்தில்விசேடமாகும்
பரிமளந்தோய்த்துமீசன் பதமலர்சாத்தலாமே. (சஉ)

## சூரியனுக்குவில்வமும், விநாயகருக்குத்துளவமு மாகாமைக்குக் காரணம்.

சூரியன்றினத்திலீசன் சூடலாற்சூரியற்கு
நேரியவில்வமாகா வாயினநிருமலற்கு
நாரிதன்கொங்கையேபோ னயத்தலாற்றுளபந்தன்னைச்
சீரியமுன்னோன்வேண்டான் சிவன்சொலச்செவியிற்கேட்டு.

## செவ்வந்திமலர்.

சாரமாமுனிவனன்று சாத்துசெவ்வந்திப்பூவை
வாரமானுடனேசூட் மண்மாரியுறையூர்ப்பெய்தச்
சேரமான்பரவலான செம்பியன்பட்டதன்மை
யாரமாவுரைக்கற்பாலா ரரன்சிராப்பள்ளிதன்னில். (சச)

## தாழம்பூ.

திருமுடிகண்டேனென்று திசைமுகன்பொய்யுரைப்ப
விருமடிகரியாநிற்ப விருவர்க்குஞ்சாபமெய்த
வருமடியவர்கள்கைதை மலர்சிவன்முடியிற்சாத்தார்
பெருமிடிவரினும்பொய்ச்சொற்பிதற்றிடார்பெரியோராவார்.

## நந்தனவனம் வைத்ததினாற் சிவத்துரோகந் தீர்ந்தமை. வேறு.

அந்தணனாலயத்திலரன்பூசைக்கேறு
மரம்பைபநறுங்கனிவாங்கித் திவசஞ்செய்ய
வந்தபெரும்பாவத்தானரகமெய்த
மறலியுடன்மாலயனுமறியோமையா

விந்தரகிவனெய்துங் காலமென்ன
விவன்கிளையிலொருவருமங் கின்மையாலே
நந்தவன முனியியற்றி நறும்பூச்சாத்த
நான்மறையோ னம்மலரா னரகந்தீர்ந்தான். (சசு)

வியாக்கிரபாதர்முதலியோர் பூவாலருச்
சித்தமுறைமை. வேறு.

சிறையளிபுகுதாமுன்னஞ் சிறுகாலையெழுந்திருந்து
பொறைமரம்வழுக்காதேறப் புலிநகம்பெற்றுமந்த
நறைமலர்ப்பழுதுபார்க்க நகந்தொறுங்கண்படைத்துங்
குறைவறப்புரிந்தான்பூசை குயவரிப்பதத்தினனே. (சஎ)

கங்கையின்மிதந்தபூவைக் கழுவியெயருச்சித்தோனும்
வெங்கலின்மலரிட்டோனும் விழிமலர்சாத்தினோனு
மங்கையர்முலைமேற்கிள்ளித் தாம்பூலம்வைத்தோன்றானுஞ்
சங்கரற்குகந்தவன்பாற் றலையினற்சாத்தினோனும். (சஅ)

நினைவுவேறுதலாகாதெனல்.

கொந்தலர்கொய்யும்போது கூர்விழிமையலாலே
பைந்தொடிமடவார்தம்மைப் பார்த்தலாற்கைலைவெற்பிற்
சுந்தரன்பட்டகாதை யறிதிரேதுணர்மென்போதா
லந்தணர்கீழ்களாவார் கீழ்களந்தணர்களாவார். (சகூ)

பெருக்கமாமலர்களேனும் பிஞ்ஞகன்பிரியங்கூரான்
சுருக்கமேயெனினுமையா தூய்மையேயணையுங்கண்டீ
ருருக்கமுமின்றிப்பூவு முதகமும்பழுதேயானு
லருட்கணுமுளவோகண்ணி லருவருத்திடுவனையன். (ரு0)

விரத்தர்தன்மை. வேறு.

ஆம்விரத்திமுதிர்ந்தவர்க ளருச்சனையுஞ்செயவேண்டிற்
பூமரத்தினுதிர்ந்தமலர் புன்சருகுங்கொளற்பாலார்
மாமரத்தின்கோலொசித்து வாய்விளக்கவுங்கொள்ளார்
தாமொருத்தர்தாக்கொள்வர் தாவரங்கள்சலியாமே. (ருக)

## மாவிளக்கிடுமுறைமை. வேறு.

தவறறப்பகலுணிக்கிச் சனிப்பிரதோட்மாதல்
சிவநிசியாதல்வெண்டா மனையினூற்றிரியாற்றூண்டி
யவமறுசெஞ்சம்பாவி னரிசிமாவகலாப்பண்ணிக்
கபிலைநெய்கொண்டுதீபங்கண்டுளோர்கொண்டுளோரே.(ருஉ)

உத்தமமொருமுந்நாழி யொன்றனாநாழிநெய்தான்
மத்திமமதந்தானு மற்றதிற்பாதிநெய்யாங்
கைத்திரியளவுகையிற் பருவிரற்கணிதமாகு
மத்திரியெரியுஞ்செந்தீ யங்குலமாறிரண்டே. (ருங)

## நூல்செய்தோர்பெயரும், முதனூலும், நூற்பெயரும், நூற்பயனும்.

ஆர்புனைசடையோன்சைவ வாகமங்களையாராய்ந்து
பேர்புனைகமலைஞானப் பிரகாசன்றமிழாற்சொன்ன
வேர்புனைதளஞ்சேர்புட்ப விதிமாலைப்படியேபாரிற்
சீர்புனைபூசைசெய்வோர் திருவருள்பெறுவர்தாமே. (ருச)

புட்பவிதிமுற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.